## களுத்துறை பிரதேச சபை
## களுத்துறை மாவட்டம்

---

### 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக் கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2017 மார்ச் 31 ஆந் திகதியன்றும் முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2016 மார்ச் 31 ஆந் திகதியன்றும் கணக்காய்வுக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், மீளாய்வாண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியினது அறிக்கை 2017 செப்டம்பர் 27 ஆந் திகதியன்று சபையின் செயலாளருக்கு அனுப்பி வைக்கப்பட்டுமிருந்தது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இவ்வறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் சுட்டிக் காட்டப்பட்டவாறான விடயங்களால் ஏற்படும் தாக்கங்களைத் தவிர, 2016 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமை மற்றும் அத்தினத்தில் முடிவுற்ற ஆண்டிற்கான அதன் நிதிச் செயலாற்றல் என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கேற்ப உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்தப்படுகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மூலதனத்திற்கு வருவாயின் பங்களிப்புக் கணக்கு மீதியானது நிலையான சொத்துக் கணக்கு மீதிக்கு நிகராக வேண்டுமாயினும், சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் அவ்விரு கணக்குகளுக்குமிடையே ரூபா 659,162 வேறுபாடு நிலவியது.

(ஆ) மாகாண குறித்தொதுக்கப்பட்ட அபிவிருத்தி மானியத்தின் கீழ் வேலைகளுக்கான செலவினம் ரூபா 5,831,503 ஆகவேண்டுமெனினும், நிதிக்கூற்றுக்களில் ரூபா 5,449,088 காட்டப்பட்டமையால் வேலைச் செலவினம் ரூபா 382,415 குறைத்துக் காட்டப்பட்டிருந்தது.

(இ) உள்ளூர்க் கடன் அபிவிருத்தி நிதியத்தின் 2016 டிசெம்பர் மாதத்திற்குரிய கொடுப்பனவு செய்ய வேண்டிய கடன் தவணைப் பணமாகிய ரூபா 39,650 கடன் கணக்கில் வரவு வைக்கப்பட்டு கடன் கொடுத்தோர் கணக்கில் செலவு வைக்கப்பட வேண்டுமாயினும், கடன் கணக்கிற்குப் பதிலாக வருமான செலவினக் கணக்கில் வரவு வைக்கப்பட்டிருந்தது. இதற்கமைய, மீளாய்வாண்டின் முடிவில் உள்ளவாறு உள்ளூர்க் கடன் அபிவிருத்தி நிதியக் கடன் கணக்கு மீதி ரூபா 39,650 அதிகரித்தும் மீளாய்வாண்டினது மிகை ரூபா 39,650 குறைத்தும் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தன.

(ஈ) மீளாய்வாண்டின் நிலையான வைப்பு வட்டி வருவாயாகிய ரூபா 384,637 ஏனைய வருவாயின் கீழ் காட்டப்படாது சம்பள மீளளிப்பாகக் காட்டப்பட்டதால் சம்பள மீளளிப்பு ரூபா 384,637 அதிகரித்தும் ஏனைய வருவாய் ரூபா 384,637 குறைத்தும் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தன.

(உ) மீளாய்வாண்டின்போது கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 25,060 பெறுமதியான 02 புல் வெட்டும் இயந்திரங்கள் மூலதனமாக்கப்படாதமையால் நிலையான சொத்துக்களும் மூலதனத்திற்கு வருவாயின் பங்களிப்புக் கணக்கும் ரூபா 25,060 குறைவாகக் காட்டப்பட்டிருந்தன.

(ஊ) மீளாய்வாண்டில் கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 315,451 பெறுமதியான மூலதனப் பொருட்கள் நிதிக் கூற்றுக்களில் மீண்டுவரும் செலவினமாகக் காட்டப்பட்டிருந்தன.

(எ) மீளாய்வாண்டின்போது பொது வசதிகளுக்கான கடன் கொடுத்தோராகிய ரூபா 32,957 , வேலைக் கடன் கொடுத்தோராகிய ரூபா 115,235 ஓய்வூதியக் கடன் கொடுத்தோராகிய ரூபா 33,474 என்பன ஆண்டிற்கான கடன் கொடுத்தோராக நிதிக்கூற்றுக்களில் காட்டப்படாமையால் மீளாய்வாண்டினது கடன் கொடுத்தோர் தொகை ரூபா 181,666 குறைவாகவும் ஆண்டிற்கான செலவினம் ரூபா 181,666 குறைவாகவும் கணக்குகளில் காட்டப்பட்டிருந்தன.

(ஏ) 2016 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு ஓய்வூதிப் பணிப்பாளருக்குக் கொடுப்பனவு செய்ய வேண்டிய தொகை ரூபா 61,333 ஆகும். எவ்வாறாயினும், அதனை ரூபா 41,495 ஆக நிதிக்கூற்றுக்களில் காட்டியமையால் கடன் கொடுத்தோர் தொகை ரூபா 19,838 குறைவாகக் கணக்கில் காட்டப்பட்டிருந்தது.

(ஐ) மீளாய்வாண்டிற்கான தீர்வை வரி மற்றும் வரி வருவாய் ரூபா 10,124,353 ஆகியபோதும், நிதிக்கூற்றுக்களில் ரூபா 10,234,854 ஆகக்

காட்டப்பட்டமையால் மீளாய்வாண்டிற்கான தீர்வை வரி மற்றும் வரி வருவாய் என்பன ரூபா 110,501 அதிகரித்து நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தன.

(ஒ) உள்ளூராட்சி நிறுவனங்களது அடிப்படை வசதிகளை முன்னேற்றுவதற்கான நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் ஒரு வேலைக்கான கடன் பட்டோர் மற்றும் கடன் கொடுத்தோர் தொகை ரூபா 566,381 குறைவாகவும் மேல் மாகாண அபிவிருத்தி மானிய நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் ஒரு வேலைக்கான கடன் பட்டோர் மற்றும் கடன் கொடுத்தோர் தொகை ரூபா 43,034 குறைவாகவும் கணக்குகளில் காட்டப்பட்டிருந்தன.

(ஓ) முன்னைய ஆண்டினது சபையின் வேலைகளுக்கான கடன் கொடுத்தோர் தொகையான ரூபா 400,000 திரண்ட நிதியத்தில் சீராக்கல் செய்யப்படுவதற்குப் பதிலாக மீளாய்வாண்டின் செலவினமாகச் சேர்த்துக் கொள்ளப்பட்டதால் ஆண்டிற்கான செலவினம் ரூபா 400,000 அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது.

### 1.3.2 கணக்காய்விற்கான சான்றின்மை

தேவையான தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படாமையால் ரூபா 37,403,194 கூட்டுத் தொகையுடைய கொடுக்கல் வாங்கல்களைக் கணக்காய்வில் திருப்திகரமாகச் சான்றுறுதிப்படுத்த முடியவில்லை.

## 2. நிதிசார் மீளாய்வு

### 2.1 நிதிப் பெறுபேறுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களின் பிரகாரம், 2016 டிசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவினத்திலும் கூடிய வருவாய் ரூபா 44,588,304 ஆகும். இதனோடொத்த முன்னைய ஆண்டினது மீண்டுவரும் செலவினத்திலும் கூடிய வருவாய் ரூபா 28,476,359 ஆகும். இதற்கமைய, முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டினது நிதிக்கூற்றுக்களில் ரூபா 16,111,945 அதிகரிப்பு தென்பட்டது.

வருவாயில் ரூபா 15,965,209 அதிகரிப்பும் செலவினத்தில் ரூபா 146,736 குறைவும் நிதிக் கூற்றுக்களில் ரூபா 16.111,945 அதிகரிப்புக்கான பிரதான காரணிகளாகும்.

## 2. வருவாய் நிர்வாகம்

## 2.2.1 மதிப்பிடப்பட்ட வருவாய், உள்ளவாறான வருவாய் மற்றும் வருவாய் நிலுவை

மீளாய்வாண்டின் பொருட்டுச் சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பிடப்பட்ட வருவாய் உள்ளவாறான வருவாய், வருவாய் நிலுவை என்பன தொடர்பான தகவல்கள் கீழே காணப்படுகின்றன.

| | வருவாய்க்கான விடயம் | மதிப்பிடப்பட்ட வருவாய் | உள்ளவாறானது | டிசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட நிலுவை |
|---|---|---|---|---|
| | | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 |
| (i) | தீர்வையும் வரியும் | 10,235 | 8,295 | 4,618 |
| (ii) | குத்தகை வாடகை | 156 | 120 | 52 |
| (iii) | அனுமதிப் பத்திரக்கட்டணம் | 1,966 | 1,966 | - |

## 2.2 தீர்வை வரி

(அ) மீளாய்வாண்டின் ஆரம்பத்திலிருந்த ரூபா 5,669,771 நிலுவையில் 55 சதவீதமான ரூபா 3,104,936 ஆண்டின்போது அறவிடப்பட்டிருந்தது. முன்னைய ஆண்டிற்கான நிலுவையில் மேலும் அறவிடப்பட வேண்டியிருந்த தொகை ரூபா 2,564,835 ஆகும்.

(ஆ) மீளாய்வாண்டின் பட்டியலிடப்பட்ட தொகை ரூபா 9,358,209 ஆகும். ஆண்டின் போது அதில் ரூபா 7,374,633 அல்லது 79 சதவீதம் அறவிடப்பட்டிருந்தது. தற்போதைய பட்டியலிடப்பட்ட தொகையில் ஆண்டின் இறுதியில் நிலவிய நிலுவை ரூபா 1,983,575 ஆகும்.

(இ) மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறான தீர்வை வரி நிலுவை மீதி ரூபா 4,548,410 ஆகும். சமர்ப்பிக்கப்பட்ட காலப் பகுப்பாய்வின்படி 3 ஆண்டுகளுக்கு மேற்பட்ட 1854 கூறுகளுக்குரிய தீர்வை வரி ரூபா 2,395,768 ஆகும். அறவிடப்படாதுள்ள தீர்வை வரி சம்பந்தமாக எச்சரிக்கை அனுமதிப்பத்திரத்தை வழங்குவதற்கோ அல்லது சொத்துத் தடை விதிப்பதற்கோ நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவில்லை.

**2.2.3 வேலைகளுக்கான வரி/ வர்த்தக வரி/ வர்த்தக அனுமதிப் பத்திரக் கட்டணம்**

ஒவ்வொரு ஆண்டின் ஆரம்பத்திலும் வேலைகளுக்கான வரி, வர்த்தக வரி, வர்த்தக அனுமதிப் பத்திரக் கட்டணம் என்பவற்றைக் கொடுப்பனவு செய்ய வேண்டிய நபர்களிடமிருந்தும் நிறுவனங்களிலிருந்தும் மேற்படி வரி அறவிடப்பட வேண்டுமாயினும், மீளாய்வாண்டு முடிவில் உள்ளவாறு வேலைகளுக்கான வரியான ரூபா 19,650 , வர்த்தக வரியான ரூபா 46,850 என்பன நிலுவையாக இருந்தன. இந்நிலுவை மீதிகளை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

**2.2.4 நீதிமன்றத் தண்டப் பணமும் முத்திரைக் கட்டணமும்**

மாகாண சபையின் தலைமைச் செயலாளரிடமிருந்தும் ஏனைய அதிகாரிகளிடமிருந்தும் 2016 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு பெற வேண்டிய தொகை பின்வருமாறு.

| | | ரூபா |
|---|---|---|
| (i) | நீதிமன்றத் தண்டப்பணம் | 53,809,684 |
| (ii) | முத்திரைக் கட்டணம் | 87,231,976 |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயற்பாட்டு / முகாமைத்துவ வினைத்திறமையின்மை

(அ) சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் 2016 ஆம் ஆண்டின் ஆரம்ப மீதியை களஞ்சியத்திலிருந்து பெற்ற கையிருப்புப் பட்டோலையுடன் சீராக்கல் செய்வதற்கு 16 ஆம் 17 ஆம் இலக்க நாட்குறிப்புகளின் மூலம் மேற்கொள்ளப்பட்ட மாற்றங்களால் ஏற்பட்ட ரூபா 75,695 மீதியை இனங்கண்டு அதனைக் கணக்கிலிட்டிருக்கவில்லை.

(ஆ) பொதுக் களஞ்சியம், களக் களஞ்சியம், நூலகக் கணக்குகளினது ஆரம்ப மீதிகளாகிய முறையே பொதுக் களஞ்சியத்தில் ரூபா 373,446 வரவு வைக்கப்பட்டும், களக் களஞ்சியக் கணக்கில் ரூபா 297,651 செலவு வைக்கப்பட்டும், நூலகப் புத்தகக் கணக்ல ரூபா 659,161 வரவு வைக்கப்பட்டும் சீராக்கல் செய்யப்பட்டு கணக்குகளில்

சமர்ப்பிக்கப்பட்டமையால் வருடாந்த நிதிக் கூற்றுக்களில் உண்மையான நிலைமை நிரூபணமாகாதிருந்தமை அவதானிக்கப்பட்டது.

(இ) 2016 ஆம் ஆண்டின்போது 599 கட்டிட விண்ணப்பங்கள் பெறப்பட்டு அவற்றுள் 58 நிராகரிக்கப்பட்டும் 541 விண்ணப்பங்கள் அங்கீகரிக்கப்பட்டுமிருந்தன. அவற்றுள் 20க்கு மாத்திரமே இசைவுச் சான்றிதழ்கள் வழங்கப்பட்டிருந்தன. இசைவுச் சான்றிதழ்கள் பெறப்படாத கட்டிட விண்ணப்பங்களுக்கு இசைவுச் சான்றிதழ்களை வழங்கி, புதிய தீர்வை வரி மதிப்பீட்டைத் தயாரித்து, தீர்வை வரியை அறவிடுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவில்லை.

(ஈ) வங்கிக் கணக்கிணக்கம்

---------------------------------------------

(i) மக்கள் வங்கியின் 039-1-001-2-2997958 (பொது) ஆம் இலக்க கணக்கிற்கென 2016 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு தயாரிக்கப்பட்ட வங்கிக் கணக்கிணக்கக் கூற்றின் பிரகாரம் 2009 தொடக்கம் தேறாதிருக்கும் 3 காசோலைகளது ரூபா 16,372 மீதியை தீர்த்து வைக்காது, வங்கிக் கணக்கிணக்கக் கூற்றில் அது தொடர்ச்சியாக முன்கொண்டுவரப்பட்டவாறிருந்தது.

(ii) 2016 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு தயாரிக்கப்பட்ட வங்கிக் கணக்கிணக்கக் கூற்றின் பிரகாரம் நேரடிச் செலவு வைப்பான ரூபா 3,523,860 மற்றும் நேரடிச் செலவு வைப்பான அங்கத்தவர் படியான ரூபா 319,800 மீதி என்பவற்றை இனங்காணாது அநேக ஆண்டுகளாக அவை கணக்கிணக்கக் கூற்றில் தொடர்ந்தவாறிருந்தன.

(உ) எட்டவில மயானம்

-----------------------------------

மொத்தக் கிரய மதிப்பீடின்றி 2011 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட இம் மயான நிர்மாண வேலைக்கு 2016 டிசெம்பர் 31 ஆந் திகதியளவில் ரூபா 14,037,636 செலவிடப்பட்டிருந்தது. தற்போது 6 ஆண்டுகள் கழிந்த நிலையிலும் வேலையைப் பூர்த்தி செய்து பொது மக்களின் தேவைகளுக்கு அதனைப் பயன்படுத்தப்படுவது தவறியிருந்தது.

(ஊ) சொத்து முகாமைத்துவம்

சபையின் காணி, கட்டிடம் அடங்கலாக சகல சொத்துக்களினதும் வருடாந்தக் கணிப்பு மேற்கொள்ளப்படாமை, நிலையான சொத்துப் பதிவேட்டை நாளதுவரையாக்காமை, நாகொடை மற்றும் மொரொன்துடுவ உப அலுவலகங்களில் 2007 முதல் 2014 வரையான காணி ஏல விற்பனைகளது கோவைகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படாமை, ஏலவிற்பனைக் காணிகளில் பொது வசதிகளுக்கென சபை பெறக்கூடிய காணிகளது உரித்துறுதி பெறப்படாமை போன்ற விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(எ) முச்சக்கர வண்டித் தரிப்பிட அனுமதிப் பத்திரக் கட்டணம் அறவிடப்படாமை

2017 மார்ச் 27 ஆந் திகதிய பொதுச் சபைத் தீர்மான இலக்கம் 7.1.2 இன் மூலம் ஒரு முச்சக்கரவண்டிக்கு ரூபா 600 வீதம் அறவிடுவதெனத் தீர்மானிக்கப்பட்டு உப விதிகள் தயாரிக்கப்பட்டபோதும், 2015 ஆம் ஆண்டில் 509 முச்சக்கர வண்டிகளிலிருந்து ரூபா 305,400 மற்றும் 2016 ஆம் ஆண்டில் 578 முச்சக்கர வண்டிகளிலிருந்து ரூபா 652,200 என அனுமதிப்பத்திரக் கட்டணத்தை அறவிடுவதற்கு 2017 மார்ச் 27 ஆந் திகதியளவிலும் சபை நடவடிக்கை எடுத்திராததுடன், நிலுவைக் கட்டணத்தைக் கணக்கிலிடுவதற்கான நடவடிக்கையையும் மேற்கொண்டிருக்கவில்லை.

(ஏ) வாகனக் கட்டுப்பாடு

(i) சபைக்குரிய 45 வாகனங்களுள் 03 டிறக்டர்கள், 05 டிறெய்லர்கள், கல் உருளை, நீர் பவுசர், கை டிறக்டர் என்பன செயற்படுத்தப்படாத நிலையில் உள்ளதுடன், அவற்றைப் பழுதுபார்த்துப் பயன்படுத்தவதற்கோ அல்லது கைதவிர்ப்புச் செய்வதற்கோ நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவில்லை.

(ii) மீளாய்வாண்டில் விபத்துக்குள்ளான டபள் கெப் வண்டியைப் பழுதுபார்ப்பதற்குச் செலவான ரூபா 57,150 காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தால் மீளளிக்கப்படாது சபையின் நிதியிலிருந்தே அச் செலவினம் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

## 3.2 திண்மக் கழிவுப் பொருள் முகாமைத்துவம்

சபையின் அதிகாரத்துக்குட்பட்ட பிரதேசத்தில் சேகரிக்கப்படும் கழிவுப் பொருட்கள் களுத்துறை நகர சபையிடம் ஒப்படைக்கப்படுகின்றன. கழிவுப் பொருள் முகாமைத்துவம் தொடர்பாகப் பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) திண்மக் கழிவுப் பொருள் முகாமைத்துவத்திற்கான உப விதிகள் தயாரிக்கப்படவில்லை.

(ஆ) கழிவுகள் அகற்றப்படும் இடத்திற்கான சுற்றாடல் அனுமதிப் பத்திரம் பெறப்படவில்லை.

(இ) கழிவுப் பொருள் முகாமைத்துவத்தின் செலவினத்தை ஈடு செய்வதற்கான வரி அறவிடப்படவில்லை.

## 3.3 செயலாற்றல்

சபையின் நடைமுறைக் கணக்கினது சராசரி மாதாந்த மீதி ரூபா 13 மில்லியனாகும். இதற்குப் புறம்பாக ரூபா 6.4 மில்லியன் நிலையான வைப்புகளும் இருந்தன. இதற்கமைய, சபையின் நிதி நிலைமை சிறந்த நிலையில் இருந்தபோதும், மீளாய்வாண்டில் சபை அமுலாக்கிய மூலதனச் செயற்திட்டங்கள் 6 ஆகும். அவற்றுள் அலுவலகத்திற்கு மைபூசும் 2 காசோலைகள் மாத்திரமே நடைபெற்றிருந்தன. இதற்கமைய, ஆண்டின்போது 04 சபை நிதியத்தாலான வேலைகள் மாத்திரமே ஆவதுடன் அவற்றுள் ஆண்டின்போது நிறைவேறியது ஒரு வேலை மாத்திரமே.

## 4. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டு அம்சங்களில் சபையின் விசேட கவனம் தேவைப்படுகின்றது.

(i) கணக்கீடு

(ii) வருவாய் நிர்வாகம்

(iii) பதவியணி முகாமைத்துவம்

(iv) வாகனக் கட்டுப்பாடு

(v) பாதீடு